# ஆத்ம ஜோதி.



பரிவான மாதாவே, பரமாத்ம ஜோதியே
அறிவான ஆத்மாவே, அன்னை கிருஷ்ணபாயே.


| | | |
|---|---|---|
| சோதி 1 | விரோதிஹு ஐப்பசிமீ | சுடர் 12 |

# பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | கிருஷ்ண சைதன்ய வணக்கம் | 345 |
| 2 | ஆனந்தக்களிப்பு | 346 |
| 3 | சக்தி வழிபாடு | 347 |
| 14 | தேவியம்மையாரின் முதற்காட்சி | 352 |
| 5 | பக்த மீராபாய் | 353 |
| 6 | தாய் கிருஷ்ணாபாய் | 354 |
| 7 | அழிவும் ஆக்கமும் | 358 |
| 8 | அன்னை கிருஷ்ணாபாய் அர்ச்சனை மாலை | 360 |
| 9 | அருளே அன்னை | 362 |
| 10 | தாயே | 366 |
| 11 | கதிர்காமத் திருப்புகழ் | 369 |
| 12 | அற்புதங்களில் மயங்குவது அறிவுடைமை ஆகாது | 370 |
| 13 | ஆண்டாள்-கண்ட கனவு | 372 |
| 14 | இலக்குமி தோத்திரம் | 374 |
| 5 | திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபை | 375 |
| 16 | செய்தித்திரட்டு | 376 |



# ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)



கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

சந்தாவிபரம்

ஒருவருடம் ரூ. 3/- ஆயுள் சந்தா ரூ. 75/- தனிப்பிரதி ச. 30.

"ஆத்ம ஜோதி" நிலயம்,

நாவலப்பிட்டி, [சிலோன்].

# சந்தா நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

எல்லாம்வல்ல பராசக்தியின் திருவருளாலும், இன்று உடல் கொண்டுலாவும் பல மகாத்மாக்களின் ஆசியினாலும், நமது "ஆத்மஜோதி" யின் பதினொருசுடர்கள் ஒவ்வொரு மாசமும் முதலாந்தேதி தவறாது ஏற்றப்பட்டு, முதலாம் ஆண்டின் கடைசியான இச்சுடர் தூய அன்னை கிருஷ்ணபாயின் திருவுருவுடன் பிரகாசம் அளிக்கின்றது.

தமிழ் மக்கள் சகலர்க்கும், சாதிமதபேதஞ் சிறிதுமின்றி ஆத்மீகத்துறையில் சுத்த சமரஸ சன்மார்க்க நெறியைப் பற்றிய விளிப்பையும் எழுச்சியையும் தூண்டுவதே 'ஆத்மஜோதி'யின் முதற்பெரும் நோக்கமாகும். அச்சுச் செலவு, தபாற்செலவு இரண்டுக்கும் மாத்திரம் போதுமான மிகக்குறைந்த சந்தா விகிதத்தை ஏற்படுத்தி வியாபார முறையில் விளம்பரம் எதனையும் ஏற்காது அரிய அத்யாத்ம விஷயங்களை எளிய இனிய நடையில் இதுவரையும் பிரசுரித்துள்ளோம்.

அடுத்த ஆண்டில் பற்பலபுதுச்சிறப்புகளுடன், கூடிய பக்கங்களுடனும் 'ஆத்மஜோதி' வளர்ச்சியடையவேண்டுமென்பது எங்கள் பேரவா. அநேகம் அபிமானிகளும் இதே கருத்தைஎழுதி எமக்கு மகிழ்ச்சியுடன் உற்சாகமும் தந்துள்ளனர். அன்பர்களின் ஆதரவு கிடைப்பின் இக்கோரிக்கை நிறைவேறியே தீரும். ஆகையால் சந்தாநேயர்கள் அனைவரையும், புதுஆண்டுச் சந்தாப்பணம் நாளது விரோதிவருட கார்த்திகைமாதம் முதலாம்தேதி[15-11-49]க்கு முன், மணி ஓடர் போஸ்டல் ஓடராகவோ அல்லது பணமாக நேரிலோ எங்களுக்குக் கிடைக்குமாறு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம். முதலாம் ஆண்டுச்சந்தா தரவேண்டிய அன்பர்கள் அதனையும் புதுஆண்டுச் சந்தாவுடன் சேர்த்து அனுப்புவார்களென எதிர்பார்க்கின்றோம்.

ஆரம்பத்தில் விடுத்துள்ள விண்ணப்பத்தில் கூறியபடி இறைவன் திருவருள் ஒன்றே 'ஆத்மஜோதி'யின் மூலநிதியும் சேமநிதியுமாகும். அதற்கு இதுவரையில் விஷயதானஞ்செய்தோர் சகலரும் பயன் கருதாப் பணிசெய்யும் பண்புடையோராவர். பணங்கொடுத்து இதுவரையில் ஓர் கட்டுரையாவது பெறவில்லை; இனிப்பெறப்போவதுமில்லை.

க இராமச்சந்திரன்
கௌரவ ஆசிரியர்

நா முத்தையா
பதிப்பாசிரியர்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி [சிலோன்]
10-10-49.

ஓம்.

# ஆத்ம ஜோதி.

—:-:—

பெயர்வடி வாதியாம் பேதங்கடந்த
வுயர்பொரு ளொன்றுண்டென் றுணர்
—சுத்தானந்தர்.

சோதி 1 | விரோதி௵ ஐப்பசி மீ | சுடர் 12

## கிருஷ்ண சைதன்யவணக்கம்.

—:-:—

கற்றாருணுங் கனியேநிறை மதிநேர்முக வமிழ்தே
பற்றாயுள தற்றாரவர் பாடுங்கிருஷ் ணபாயே
முற்றாவிளங் குதலைச்சிறு மொழியாய்புகழ் ராமன்
பொற்றாள்பணி தாயேயுனைப் போற்றப்பணி யாயே,

அஞ்சம்மயில் கஞ்சம்பொலி காடேநக ராக
நெஞ்சம்தனில் விஞ்சும்பர ஞானத்தொடு நீல
மஞ்சைசந்நிகர் தருசாமள வண்ணந்திகழ் ராமன்
தஞ்சம்மென வாழுந்திருத் தாயேகிருஷ்ணபாயே,

ஆனந்தம அருவாகிய வனியார்தரு மிடமே
தானந்தமி லணியாற்பொலி தலமாமென வாழ்ந்தே
யூனந்தவிர் ஞானத்தலைடைத்தட னாயக்
கானந்திய குழலாய்கிருஷ் ணபாயே யெமைக்காவாய்

அகமேதிகழ் ஞானத்தொளி யலர்ந்தேமிரு மழகார்
முகமேபொலி சொருபத்தொடு முற்றாவிளங்கதிரின்
தகவேநிக ராகும்மெனத் சவமேபொலியோகத்
திகலார்கிருஷ் ணபாயேயெமக் கென்றேவருள் தாராய்,

சத்தாகிய குணமேகொடு தயாரும்மரு ளுருவாய்
எத்தாயினு மினியாயென எவரும்புக ழன்னாய்
இத்தாரணி யெங்கும்பர ஞானப்பயி ரோங்க
வித்தேவிடு மாயேகிருஷ் ணபாயேயுன தபயம்,

—பண்டிதை, பத்மாசனி-இராசேந்திரம்,

# ஆனந்தக் களிப்பு.

ஆனந்தாச் சிரமத்தின் காந்தி —மோன
அன்னைகிருஷ் ணபாயின் அருள்முக சாந்தி.

சிந்தித்த வர்க்கருள் செய்யும் — சிவ
ஜெகபர பேத திருஷ்டிகள் நையும்
சந்திக்க மாயைகள் சாயும் — நாளும்
சச்சிதா னந்த சதாநிட்டை செய்யும். (ஆனந்)

மெஞ்ஞானப் பாதையைக் காட்டும் — சுத்த
வேதாந்த வெட்ட வெளியினி லாட்டும
அஞ்ஞான விருளினை யோட்டும் — நம்மை
அண்டின தோஷ மனைத்தையும் வாட்டும். (ஆனந்)

தாரக ராமப்பிர சாதம் — அது
தாகமுள் ளோருக்குத் தான்தரும் போதம்
மாரக கோரங்கள் சேதம் — செய்து
வாழ்விக்க வந்த மனோலய பாதம். (ஆனந்)

பக்தி யெனும் பாதை காட்டி — தீய
பந்த மற்றுநிலே பாரென நீட்டிச்
சத்திய மற்றதை யோட்டி — என்னும்
சற்சனர் தம்மையே சார்ந்திடக் கூட்டும். (ஆனந்)

# சக்தி வழிபாடு.

(ஆசிரியர்)

மனிதன் என்று சக்தியை விரும்பத் தொடங்கினனோ அன்றே அவனால் சக்தியை வழிபடும் முறையும் ஆரம்பித்திருக்க வேண்டும். விரும்பும் ஒன்றைப்போற்றிப் பாராட்டுவது மனித இயல்பு, உலகில் நல்லாரும். பொல்லாருமாய எல்லாருமே சக்தியை விரும்புகிறார்கள். அணுக்குண்டு முதலாம் அபாரதூல சக்திப் பொருள்களையெல்லாம் தங்கள் அதிகாரத்திற்கு உட்படுத்த அல்லும் பகலும் உழைக்கும் பௌதிகசாஸ்திரிகள் தாமும் சக்தி உபாசகர்களே. இவ்விதம் சகலரையும் கவர்ச்சிபண்ணும் காரணம் பற்றியே சக்திக்குப் பெண்வடிவு அமைந்ததாகும்.

பல்லாயிம் ஆண்டுகட்கு முன்பே சிந்துநதிக்கரையில் வாழ்ந்த அதிபுராதன நாகரிக மக்கள் இயற்கைத்தாயைத் தெய்வமாகப் போற்றினர். அக்கொள்கை உலகின் வேறு பகுதிகளிலும் பரவியிருந்ததாகும், மோல்ராவில் [Molta] பண்டைநாகரிகத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்த ஜோர்ச்[Gorge Fabri]என்னும் அறிஞர் அங்கே இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே மக்கள் நாகரிகமாக வாழ்ந்தனரெனவும். இலிங்கவழிபாடு, பெண்தெய்வவணக்கம் இரண்டும் இருந்தன வென்பதற்குப் புறச்சான்றுகள் பல உள்ளன வெனவுங் கூறுகின்றார். எனவே, சிவ வழிபாடு உலகெங்கும் பரவியிருந்தகாலத்தில், சக்தி வழிபாடுஞ் சேர்ந்திருந்த தென்பது வெளிப்படை.

போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனை நிலையில் பரம்பொருளைச் சிவமெனவும், அப்பொருளே போக்கும் வரவும் புணர்வுமாகிய இயக்கத்தைச்செய்யும், புண்ணியவதியாக மாறும் போது அதனைச் சக்தியென்றும் மஹாமாயையென்றும் ஆன்றோர் அழைத்தனர். அதாவது, பரம்பொருள் தன்னைத் தோற்றத்துக்கு உட்படுத்தும் போது மாயாசக்தி யென்னும் பெயர் பெறுகின்றது, பெண்பாலாகக் கருதப்படும் பிந்தியநிலையின் மகிமையே உலகநடைமுறையாகும். குமரகுருபரர் அருளிய மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழின் செங்கீரைப்பருவத்தில், உலகின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் சிவத்தினதும் சக்தியினதும் விளையாட்டுகளாக

விபரித்துக் கற்பனை செய்யும் அழகியகவியொன்றுண்டு. அதிலடங்கிய அரியகருத்துக்களை அப்பெரியாரே சுருக்கமாக "மீனாக்ஷியம்மை குறம்" என்னும் நூலில்,

'வைத்தபகி ரண்டமெனும் மணற்சிற்றில் இழைத்திழைத்தோர்,
பித்தனுடன் விளையாடும் பெய்வளையைப்பாடுவனே';

"ஒன்றாகி அனைத்துயிர்க்கும் உயிராகியெப்பொருளும்,
அன்றாகி அவையனைத்தும் ஆனாளைப்பாடுவனே"

எனத்தந்துள்ளார்.

சூரியனுக்கு இரண்டு இயல்புகள் உண்டு: ஒன்று தன்னை விளக்குவது; மற்றையது விடயங்களை விளக்குவது. முந்திய நிலையில் கதிரோனாகவும், பிந்தியநிலையில் கதிராகவும் அழைக்கப்படுகின்றது. ஆனால், பொருளால் இரண்டும் ஒன்றேயாம், இதைப்போலவே, சிவமும் சக்தியும் தாதான்மியத்தான் (அதுதானாதல்] இருதிறப்பட்டியைந்து நிற்கின்றன. அறிவு மாத்திரையாய் அவாவாமல் நிற்பது சிவம்; புறப்பொருளை நோக்கிநிற்பது சக்தி. குணங்கடந்த சிவமாகிய நிற்குணப் பிரமத்திலிருந்து ஆலமர விழுதுபோலக் கீழிறங்கும் சக்தியானது சாத்வீகம், ராசதம், தாமசம் ஆகிய மூன்று குணங்களோடு சகுணப்பிரமமாகின்றது. இதனைச்சாதகர்கள் சக்தியாக வழிபடுவர். பிரபஞ்சம் அனைத்தும் இம்முக்குணங்களுள் அடங்கிநிற்பதால் அதற்கு அரசி அவளே. அகில அண்டங்களும் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய மூன்றினுள் அடங்கி நிற்கின்றபடியால், அவளே எல்லா அண்டங்களுக்கும் நாயகியாகின்றாள். அத்தோடு, மானிட வாழ்க்கையில் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியாகிய மூன்று அவஸ்தைகளின் சரீரங்களான தூலம், சூக்குமம், காரணம் ஆகிய மூன்றிற்கும் அவளே நாயகியாய் நிற்கிறாள். இவ்விதமும் மூன்றாகப் பிரிந்து நிற்கும் வெவ்வேறு தத்துவங்களையெல்லாம் உள்ளடக்கியே ஆதிசக்திக்குத் திரிபுரசுந்தரியென்னுந் திருநாமஞ் சூட்டப்பட்டதாகும்.

ஆதிசக்தியின் விபூதிகளின் விபரங்களைப் பரக்கத்தரும் நூல் திருமந்திரம். அதில் நாலாந்தந்திரத்தில் அடங்கியிராத சக்தி தத்துவம் வேறெந்தநூலிலுமே கிடையாது. இந்தஅற்புத சாஸ்திரத்தை அருளிய திருமூலர்,

"அவளை யறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதும் இல்லை
அவளன்றி யூர் புகுமா றறியேனே"

எனத் தமது சொந்த அனுபவமூலம் சக்திவழிபாட்டின் அத்தியாவசியகத்தை வற்புறுத்தியுள்ளார். குறித்த பாட்டின் மூன்றும் வரியிலடங்கிய கருத்தையே, அத்வைத ஞான ஒப்பற்ற செல்வரான ஆதிசங்கராசசாரியாரும், தாமியற்றிய ஆனந்தலகரி என்னும் நூலில் மிகவும் அழகாய் விளக்கியுள்ளார்.

"சிவமெனும் பொருளும் ஆதிசக்தியொடுசேரின் எத்தொழிலும்வல்ல தாம், இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதெனுமறை இசைக்குமால்" என்கிறார் அந்த மஹான்.

மணிவாசகரும் தமக்குச் செம்மையேயாய சிவபதமளித்த செல்வத்தை, அன்பினில் விளைந்த ஆரமுதமாகவும், ஒப்பிலாமணியாகவும், அப்பனுகவும் வாழ்த்து முன் 'அம்மையே' என்றே போற்றியிருப்பதையும் நோக்குக.

ஆதிசக்திக்குச் சூட்டப்பெற்ற திருநாமங்களும், குணபேதங்களும், வல்லமைகளும் காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டு நிற்கின்றன. துர்க்காதேவியாக வழிபடும் வடநாட்டுச்சாக்தர்கள் சரஸ்வதி, லக்ஷ்மி, கணேசர், சுப்ரமண்யர் ஆகியநால்வரையும்அவளின் முக்கியவிபூதிகளென்பர். துர்க்கம் என்றால் மலைக்கோட்டை; துர்க்கை என்றால கடக்கமுடியாதவர். மலைக்கோட்டைபோன்ற பிரகிருதிக்குள் நாம் சிறைப்பட்டுள்ளோம். முக்குணமயமாக அவளை நிராகரித்து நம்மால் ஒன்றுமே செய்யமுடியாது. ஆகையால் அவளது ஆதரவைப்பெறவேண்டும்என்பதே கருத்து. தேவியானவள் பார்க்குமிடமெங்கும் நீக்கமறநிறைந்து நின்று ஆணை செலுத்துபவள் என்பதை விளக்கவே, துர்க்கையின் பிரதிமைக்கு நமது ஆன்றோர் பத்துக்கரங்கள் அமைத்துள்ளனர். இப்பூமியின் எட்டுத்திக்குகளோடு, மேல்நோக்கியும், கீழ்நோக்கியும் செல்லும் மார்க்கங்களையுஞ் சேர்த்தால் மொத்தம் திசைகள் பத்தாகின்றன. எனவே அவளின் கரம் அணைக்கவோ அடிக்கவோ போகாத இடம் இல்லை என்பதாம்.

சைவ சித்தாந்தம், சிவசக்தியை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்தொழில்களை நடாத்தும் பஞ்சசக்திகளென்னும். அவற்றோடு கௌமாரி, வராகி முதலாம் சத்தமாதர்களையும். வாமை காளி முதலாம் நவசக்திகளையும் சிவ சக்தியின் மூர்த்தங்களாய் ஏற்றுக்கொள்ளும். பகவான் அரவிந்தர் தாம் விளக்கும் புதுயோகத்தில் அன்னையின் சக்திவியக்திகளை முக்கியமான நான்கு மஹாரூபங்களில் அடக்குகிறார். சாந்தவிரிவு, தெளிந்த அருள், வற்றாக்கருணை, நிறைந்த ரூபத்தை மகேஸ்வரியெனவும், அற்புத பல பராக்கிரமம், வீராவேசம், பிரசண்டவேகம் பொருந்திய ரூபத்தை மஹாகாளியெனவும். தெளிவு, கனிவு, அழகு, கவர்ச்சி. மோகனசௌந்தரியம் கூடிய ரூபத்தை மஹாலக்ஷ்மியெனவும், நுண்ணறிவு, செய்கைத்திறன், அமைதி, சரியான நிறைவுபொருந்திய ரூபத்தை மஹா சரஸ்வதியெனவும் அழைக்கின்றார். இப்பிரிவு நவீன அறிவுலகு ஏற்றுக்கொள்ளும் தரத்ததாகும்.

நிற்க, ஆதிமக்களாம் தமிழர்மேலே விபரிக்கப்பட்ட பிரிவுகளெல்லாம் தோன்றுவதற்குப் பல்லாயிரம் வருஷங்கட்கு முன்னரேயே. இச்சை, கிரியை, ஞானம், ஆகிய மூன்று சக்திகளையும் ஒருங்கே அமைத்துள்ள அற்புத முருகன் வழிபாட்டைத் தந்துள்ளார்கள். வள்ளியம்மை இச்சையையும், தெவ்வயானை கிரியையும் வேல்ஞானத்தையும் குறிக்க முருகப்பெருமான் அம் மூவகைச் சக்திகளை ஆளும் முதல்வராய்க் காட்சியளிக்கின்றார். அப்பெருமான் வழிபாடு ஒன்றே சக்திகளனைத்தையும் தரும் சிறந்த சாதனமென ஆன்றோர்கள் தமது சொந்த அனுபவங்கொண்டு விளக்கியுமுள்ளார்கள். முருகன் அமர்ந்துசெல்லும் மயில் விந்துவையும்; அவனது கொடியாகிய கோழி விந்துவுக்குமேல நிற்கும் நாதத்தையும் குறிப்பன; ஆகையால்; நாதங்கடந்த நிலையில்தான் நம்முன் ஒடுங்கிக்கிடக்கும் இச்சா; கிரியா; ஞானசக்திகள் தொழிற்படும் என்பது வெளிப்படை. தக்கசாதனையின்பயனாகவே நாம் இச்சக்திகளின்எழுச்சியைப்பெறமுடியும். இம்மூன்றுசக்திகளும் மக்களிடம் அமைந்துள்ளன என்ற உண்மையை நவீனமனோதத்துவ விற்பன்னர்களே ஏற்றுள்ளனர். வேண்டப்படுவது முறையான வழிபாடும் தியானமுமேயாம். பெறுதற்கரிய மனிதப்பிறவியின் விழுமிய நோக்கத்தை நன்குணர்ந்த நிலையில்தான் சாதனைவலுப்பெற்று சத்திகளின் எழுச்சி தீவிரமாகும். இன்று இதற்கு ஓர் ஒப்பற்ற உதா

ரணமாக விளங்குபவர் அன்னை கிருஷ்ணபாயாவர். அன்னாரின் திருவுருவப்பொலிவு இம்மாதச்சுடரை அலங்கரித்து ஒளிவீசச்செய்வது அவரது நாற்பத்தாறுவது ஆண்டு நிறைவுவிழாத் தொடர்பிலாகும். அவரிடம் நாம்காணக்கிடக்கும் அன்பு; அழகு; இனிமை ஆனந்தம்; ஆற்றல்; ஒழுங்கு; கைத்திறன்; அறிவு; அமைதி முதலாம் தெய்வ சம்பத்துகளெல்லாம், அன்னார் இச்சா; கிரியா; ஞானசக்திகளின் ஒளிபெற்றவரென்பதை நன்கு விளக்குகின்றன. நவீனநாகரீகமென்னும் மாயவலையிற் சிக்கி; 'சமத்துவம்' 'சுதந்திரம்; 'விடுதலை' என்ற போலிமந்திரங்கட்கு அடிமைகளாய் அல்லற்படும் எங்கள் இந்துப் பெண்ணுலகுக்கு தூய அன்னை கிருஷ்ணபாயின் வாழ்வானது ஓர் மலைவிளக்குப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. காரைக்காலம்மையார் ஆண்டாள் மீராபாய், சக்குபாய் முதலாம் ஸ்திரீரத்தினங்களின் பக்தித்திறனையும் ஆத்மசக்தியையும் தியாகத்தின் மாண்பையும் நினைவூட்டுகின்றது.

கோதிலாப் புகழுடைய குருராம தாசரின்
குற்றமில் சக்தியாகிக்
குவலயந் தனைத்திடக் குருகுலந் தனைநிறுவிக்
கோடிதவ மாற்றுமன்னாய்!

ஓதரிய வேதமுடன் ஆகமத் துட்பொருளை
உள்ளனு பவத்துணர்ந்தே
ஓடிவந் தணையன்பர் உளவிருள் கடிந்திடும்
ஒப்பிலாச் சோதிவடிவே!

வாதமிடு பலசமய வாதிகளும் வந்தடி
வணங்கிடும் ஞானநிறைவே
வந்தனை செயுமடியர் புந்தியில் தங்கியருள்
வழங்கிடும் கற்பதருவே!

ஆதரவு இல்லையென் றழுதழுது வருதொண்டர்க்
காதர வளிக்கும் அமுதே!
ஆனந்த நிலயத்தில் அழகுடன் அமர்ந்திடும்
அன்னையே! கிருஷ்ணபாயே!

———

# தேவியம்மையாரின் முதற்காட்சி.

[பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியது]

யான் அம்மையைக் காணப்பெறுது மனம்நொந்து நலிவுற்றிருந்தேன். ஈரஆடையைப் பிழிவார் போன்று என்நெஞ்சத்தையும் யாரோ கசக்கிப்பிழிவதை உணர்ந்தேன். இவ்வாழ்க்கையில் என் அன்னையைக்காணும் பேறுபெறமாட்டேனேவென ஐயுற்ற என்னுள்ளம், அஞ்சிக்கொந்தளித்துக்கொண்டேயிருந்தது. பின் அவளைப்பிரிந்து கணப்பொழுது தானும் வாழமுடியாத நிலையில் இனியிருந்து என்னபயன் என்றெண்ணினேன். திடீரென என் கண்களுக்கு அம்மையின் திருக்கோயிலில் வைத்திருந்த வாள் தென்பட்டது. யானும் என்வாழ்வினை முடிக்கக்கருதிப் பித்தனைப் போலத் துள்ளி ஓடி அந்தவாளைக்கைப்பற்றினேன். அத்தருணம் கருணைகூரும்அம்மையும் திடீரென்று எனது கண்முன் தோன்றினுள் மெய்ம்மறந்து; அறிவு சோர்ந்து நிலத்திடை வீழ்ந்தேன் பின்னர் நிகழ்ந்ததொன்றினையும் யான் அறியவில்லை; அன்றும் அடுத்தநாளும் நேரம் போனதைத்தானும் யான் உணரவில்லை. ஆனல் என்னுள்ளத்தினூடே அதுகாறும் கண்டறியாப் புதியதோர் தனிப்பேரின்பம் இடையீடின்றிப் பெருகிப் பாய்ந்தவண்ணமாயிருப்ப; தேவியம்மையின் உண்மையை நேரே உணரலானேன்''

இதே நிகழ்ச்சியைப்பற்றி அவர் வேறொருநாள் பின்வருமாறு கூறியதாவது:—

கட்டடங்களும் அதன் பற்பல உறுப்புகளும் கோயிலும் யாவும்; இந்த அடையாளமேயின்றிக் காணுது மறைந்தொழிந்தன. அவ்வவ்விடத்தே; அங்கிங்கெனுதபடி எங்கும் பரந்து வரையறையற்ற சோதிவாரியாம் மெய்ப்பொருளுணர்ச்சி திகழ்வதை உணர்ந்தேன். கண்ணிற்கெட்டும் தூரம்வரையும் அச்சோதிக்கடலிடைத்தோன்றிய சுடரலைகள் எல்லாப்பக்கங்களிலும் முழங்கியனவாய்; என்னை விழுங்கவருவதுபோல் பாய்ந்தன; ஒருகணப்பொழுதில் அவை என்னை முழுதும் வளைந்துகொண்டன. அந்தப் பேரலைகள் வாய்ப்பட்டு அறிவிழந்து நிலமிசைவீழ்ந்தேன்.''

———

# — பக்தை மீராபாய். —

— —:-:)-(;-:— —

(சுத்தானந்தர்)

கண்ணனன்பின் ஆவேசக்கனலே மீராபாய். கண்ணனே தனது கணவனெனக்கருதினாள்மீரா. வினைவசத்தால் அமைந்த இல்லக்கட்டுகளையும். உலகச்செல்வத்தையும் மனத்தால் துறந்து கண்ணனிடமே அவள் ஈடுபட்டாள்- மீரா இறைவனடி சேர்ந்து நானூற்றாண்டுகள் ஆகின்றன. அவள் மூட்டிய அன்புக்கனல் கோடிக்கணக்கான அன்பர் உள்ளத்திற் கனலுகின்றது. அவள் உள்ளத்திலின்றெழுந்த இசையமுதம் உலகில் பக்திப்பயிரை வளர்த்துவருகிறது.

மீரா மீவார்ராணி. அவள் கையை மீவார் மன்னனுக்குக் கொடுத்தாலும் மனத்தைமுற்றும் கண்ணனுக்கேயீந்தாள். அன்பர்கூட்டத்தையே நாடினாள். கண்ணனன்பையே பாடினாள், ஆடினாள். கடவுளன்பின் அருமையறியாக் கணவன் அவளை இடும்பை செய்தான்; பிரங்கிமுனையிற்கூடப்பயமுறுத்திக் கண்ணனன்பையே விட்டுவிடச் சொன்னான்; முடிவில் ஊரைவிட்டு ஓட்டினான். மீராபாய்க்கு உலகெல்லாம்கண்ணன்மயமே. அறியாக்கணவன் பூமாலையுடன் பாம்பைக்கொடுத்து அவளைக் கொல்லமுயன்றான். முடிவில் தற்கொலை புரிந்து கொள்ளச் செய்தான். மீரா ஹரி, ஹரியென்று ஆற்றில் விழுந்துவிட்டாள். கண்ணன் அவளைக்காப்பாற்றிக் கரைசேர்த்தான் மீரா பிருந்தாவனத்திற்குவந்து கண்ணன் காதலில் மூழ்கினாள். "கண்ணா! இதோ என் இதயத்தை உனக்கே தருகிறேன் என்ன இடர்கள் வந்தாலும்உன்னை மறவேன் சுற்றத்தார் அறியாமையாற் செய்யும் இடர்களெல்லாம் எனது அன்பையும் வைராக்கியத்தையும் சாணைபிடித்துத் தீட்டுகின்றவே கண்ணா! எனது சீவன் உன்னைக்கலந்து அந்த ஆனந்தத்தில் இசையாறுகப்பெருகாதா? கண்ணா! உன்னை ஒருகணமும் நான்மறவேன், பிரியேன், உன்னை நினைப்பதே, இசைப்பதே, துதிப்பதே, தழுவிக்கொள்வதே என்இன்பம். இரவும் பகலும் எனதுநாக்கு உன் பெயரையே சொல்லிக்கொண்டிருக்கிறது. என் இதயம் எனதுபிராணநாதனாகிய உனது நிறத்தில் ஊறிப்போனது" என்றெல்லாம் பக்தியில் கரைந்துருகி, கண்ணனின் அன்பு விளக்கில் தனது ஆவி நெய்யை வார்த்து அவன்மயமானாள்மீரா. மீராவுடன்கூடி நமதாவியும் 'கண்ணா! எங்களை அணைத்துக்கொண்டு உன்மயமாக்கு! நீயே கணவன்; உலகம் உன்மனைவி' என்று முறையிடட்டும்.

———

# தாய் கிருஷ்ணாபாய்.

(சாது ஸ்ரீ முருகதாஸ்)

என் உயிர் ஊன் அனைத்தையும்
அன்புடன் கருவினில் காத்தாள்
பன் முறை செய் பாபத்தை தன்
தண்ணருளால் அழித்தாள்
நான் என ஓர் அகந்தை வரின்
தா னென வே எதிர் நின்றாள்
என் கோவில் உலகம் நீ யதன்
தாசன் என்ற கருணைத் தாய்.

பத்துமாசம் சுமந்தாள். குவா என பூமியில் விழுந்து அழும்போது அணைத்தெடுத்துப் பால் கொடுத்தாள். தனக்கெனத் தேவைகள் இன்றி பத்தியமிருந்து பாதுகாத்தாள். அறியாப்பருவம் முதல் அழியும்நிலைவரை ஆண்டவனிடம் நன்மையையும் நன்மதியையும் நாளும்பெறவிரதங்கள் இருந்தாள்: என்னிலையில் எதைமறந்தாலும் மறவாமல் காத்தாள்; எல்லாத்தேவைகளையும் அறிந்து செய்தாள் நான் என்று அகந்தையால் மார்தட்டும்போது, அன்புடன் அணைத்துக் குற்றம் நீக்கிக் குணவானாக வழிகாட்டினாள். யார்? உலகில் குழந்தையைப்பெற்று மனிதனாக்கிய தாய்.

ஒவ்வொரு தாயும் தன்குழந்தையிடம் அன்பும் அருளும் தியாகமும், சேவையும், தயையும் உடையவளாக இருப்பது இயற்கை. ஆனால் "காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சன்றோ?" "எல்லார் மக்களும் எம்மக்கள்" ஊரார் மக்களை ஊட்டி வளர்ப்பின், தம்மக்கள் தாமே வளரும்' என்பதுபோன்ற பழமொழிகளை உபயோகிக்கலாமே தவிர ஒரே மாதிரி தாய்மையுடன் நடந்து கொள்வது முடியாது.

எல்லாஉலகையும் உயிர்களையும் தம்மக்களாகக்கருதி சேவை செய்யப்புகும் தாய், மானிடவடிவில் இருப்பாளாயின் பராசக்தியின் அவதாரம் [அம்சம் ஓர்பகுதி] என்று நிச்சயம் செய்யலாம். "பசுந்தளிர் வதங்குகையில் தன் உள்ளம் பதைத்துவாடும் கரு

ணையே'' தாய்மை என்பது உணர்ந்து அவனியை அணைக்கும் சம நோக்கு, பராசக்தியின் பிரதிபிம்பமான யோகினிகளுக்குத்தான் உண்டு; உலகைக்காத்து ஏதோ ஓரளவு தான்யமும், தயையும் நினைந்து விளங்கச்செய்வது இந்தத் தாய்த்தன்மைதான்.

தாய்மைக்குணமின்றி எந்த மூர்த்தியும் தொழில்செய்ய முடியாது என்பதை உணர்த்தவன்றோ.

"அன்று செட்டிமகள் மகிழத் தாய் கிழவியானதும்
பன்றிக் குட்டி உண்ணப் பாலுடன் தாய் பன்றியாகினதும்
தொன்று தொட்டு இயங்கும் தாய்மையே அனைத்தும் என
இன்று நன்றியுடன் மாந்தர் வாழ ஆடல் காட்டினர்."

மன்றிலாடும் ஆண்டவன்,

தாய்மை இல்லையேல் தரணியேது? சரணியெல்லாம் தனதென அணைக்கும் தாய்கள் பலர் இன்னும் இருக்கிறார்கள். அவருள் கிருஷ்ணுபாய் எனப்பெயர்கொண்டு ஆனந்தாஸ்ரமத்தில் ஓர் தாய் உலாவிவருகிறாள். தன் சிரிப்பினால் கொலையாளியும் குற்றமுணர்த்தி என்றும்குணவானுக்குகிறாள், இனிய மொழியால் வினைகள் போய் இகத்திலேயே இன்பமடைவிக்கிறாள். சேவையாலும் தியாகத்தாலும் ஆண்டவன் திருப்பெயராலும் எல்லார்க்கும்அமைதிதரமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறாள் அன்னை.

அன்று; மாளைய அமாவாசை ஏழ்மைநிறை சூழ்நிலையில் பிறந்தாள், சாதுவுக்குத் தானமாக அளிக்கப்பட்டாள். பின் விலை கொடுத்து வாங்கப்பட்டாள் உண்மை ஆதிசக்தியோ அல்லது அவள் அடியைகளோ ஒருவருக்கும் சொந்தமல்ல. ஆனால் அன்பினால் விலைக்குவாங்கப்படுவார்கள்தானே! வயதுகள் கடந்தன. ஓர் கணவனையடைந்தாள் இரண்டு குழந்தைகள் பிறந்தன, உடலுக்குப் பதியானவன் உயிருக்குப்பதியுடன் அன்னையை ஒப்புவித்து உடல் துறந்தான்.

பந்தங்கள் அறுந்தன. பரந்த உலகிற்கெல்லாம் தாயாக வேண்டியஆசை உள்ளே உதித்தது; பெற்றகுழந்தைகளின் பாசம் பறந்தது, பலஇடம் சற்குருவை நாடி பின் காசர்காடு எனுமிடத்தில்[இப்போது இருப்பதற்குமுன் ஆஸ்ரமம்இருந்த இடம்]இனிய முகமும், கருணை விழியும், அன்புச்சொற்களும், ராமநாமமும் விளங்க இருந்த ராமதாசரை குருவாக அடைந்தாள்.

ஒளி தோன்றிற்று, ஆத்மஜோதியின் உயர்வு பொங்கி எங்கும் அமைதி ஒளி சூழ்ந்தது. தாய்மையே தானுனள். குருவும் குழந்தை யானுர். உலக மக்களெல்லாம் நன்மைநாடி, அம்மா! அம்மா!! என்று அலறுவதை உணர்ந்தாள். எல்லாக் குழந்தையும் அணைக் கவாவெனக் கூவிநின்ருள்.

மாயை சொந்த மக்களைக் காட்டிப் பந்தப்படுத்தப் பார்த்தது. ஆனல் அன்னை "எனக்கு எல்லாம் மக்களே. என் அன்பு அனை வர்க்கும் சமமாகப்பொழியும். அன்னையே எனஉலகெலாம் அழைக் கிறது." என்று மாயையை அன்பினுல் வேருடன் ஒழித்தாள்

தாய்பெற்ற பிள்ளைகள் எல்லாம்நல்லதா? அதுதானில்லையே தர்மம் நியதி என்ற போர்வையோடுகூடி பலகுழந்தைகள் பல இடையூறு இழைத்தனர்.

கொடுமை பல செய்து, கொள்ளை கொள வரினும்
கோப மென்ப தறியாத, குணி எந்தன் தாய், ஆகையால்

ராமநாமாமிருதத்தை அவர்களுக்கும் அளித்துமயக்கத்தை தீர்த்து நல்லவர்களாக்கிவிடும் தன்மைகளான அன்னையை ஒன்றும் செய்ய முடியாமல் எல்லாக்கொடியரும் மறைந்தனர். ஆனந்தாஸ்ரமம் கஞ்சங்காட்டிற்கு 3 மைல் தூரத்திலுள்ள மஞ்சபதிச் சாரலில் அமைக்கப்பட்டது. அன்னையின்கருணையாலும் குருநாதரின் அரு ளாலும் ஆனந்தாஸ்ரமம் ஆனந்தமாக நடைபெறுகிறது.

இன்று: ஆனந்தாஸ்ரமத்தைச் சுற்றி ராமநகரம் தோன்றி வளர்ந்துவருகிறது. அன்னையின்பெயரில் பாடசாலை கைத்தொழிற் சாலை முதலிய நடக்கின்றன. 200 க்கு மேல் ஏழைமக்கள் உண்டு உடுத்து கற்று வருகின்ருர்கள். அன்னை அருளால் ஏழைகளுக்கு இலவச வைத்தியசாலை நடக்கிறது. எவ்வளவோ ஆயிரக்கணக் கான மக்களின் உள்ளத்தில் பக்தியையும் சேவை, தியாகம் முதலிய வைகளையும் உணர்த்திப் பணி செய்து மகிழவைத்துள்ளார்.

உடற்பசி உயிர்ப்பசி இரண்டையும் தீர்க்கும் அன்னை கிருஷ் ணுபாய் இன்பத்தை அனைவர்க்கும் தன்னைப்பார்த்தவுடன் பெறும் படியானநிலையில் இன்றும் நாம்காண ஆனந்தாஸ்ரமத்திலுள்ளாள்,

அன்னையும் குருநாதரும் இப்பொழுது ஆஸ்ரமத்திற்கு வர இயலாத, வரத்தெரியாத மக்களுக்கும் அருள்கொடுக்க எண்ணி

யாத்திரையில் இருக்கிறாள். இக்கட்டுரை யெழுதும் போது தாசன் தாயுடன் இருக்கிறான். 22-ம் திகதி மாளைய அமாவாசை தினம் தாயின் சன்னிதியிலேயே நாற்பத்தாறுவது பிறந்ததின விழாவைக் கொண்டாடும் பெருமை மதறாஸ் அன்பர்களுக்குக் கிட்டியுள்ளது,

ஆதித்தாயின் வடிவான கிருஷ்ணபாயின் அருளால் உலக மக்கள் எல்லோரும் அமைதியான சூழ்நிலையில் சமத்வ நோக்கு டன்,

தம்மைத் தாமென்று ணர்ந்து
தரணி தா னென்றறிந்து
தனதெனும் மாணவப் பேய்போய்
தன் னாத்ம ஜோதி தாங்கண்டு
தாயென எங்கும் கண்டென்றும்
தாசனாய் வாழ்வாராக மக்கள். என்று

எல்லாம் வல்ல ஆதி பராசக்தியையும் அவள்வடிவான கிருஷ்ண பாயையும் வேண்டிப்பாடிப் பணிவோமாக.

---

அண்டப்பரப் பெங்குமண்டிப் படர்ந்தபே
ராநந்த வெள்ளம் வாழ [மெனும்
அருட்சரியை கிரியைசிவ யோகமொடு ஞான
அதிகசிவ தருமம் வாழ்க,
கண்டவர்க் கினியநஞ் சோமேசர் வாழநின்
கட்கடைக் கருணைவாழக்
காசினியொருங்குசிவ பத்திகுரு பத்திசங்
கமபத்தி செய்துவாழ
வெண்டிருப்பூதியுய ரக்கமணி வாழமெய்
விளக்குமஞ் செழுத்துவாழ
வேதநெறி சைவநெறிவாழக் குளந்தைநகர்
மேன்மேற் செழித்துவாழப்
புண்டர நுதற்றொண்டர் தங்குழாம்வாழநீ
பொன்னூச லாடியருளே
பூரணமதிக்கருள் புரிந்த கமலாகரீ
பொன்னூச லாடியருளே.

—சிவஞானசுவாமிகள்.

# அழிவும் ஆக்கமும்.

(உமா)

1. வாழ்க்கையின் பாதையி — லோர்நாள்
வழிக்கொள்ளை நடந்ததடி
வாழ்க்கை வெறிதாச்சு — சகியே
வழிதா னிருளாச்சு.

2. இருண்ட வனாந்தரத்தே — எனக்கோர்
இனிய துணையுமுண்டோ
மருண்டசை வற்றுவிட்டேன் — மனதில்
நினைவு மழிந்ததடி.

3. கண்கள் திறந்திருந்தும் — நானங்கு
கண்டது மையிருளே
திண்டாடும் வேளையிலே — செவிகள்
தாமும் செவிடாச்சு.

4. எட்டி நடக்கவென்றால் — எதிரில்
எதுவுமே தோன்றவில்லை
கட்டிப் பிடிக்கவென்றாற் — கரங்களில்
தட்டுவ தேதுமில்லை.

5. தேக மசையவில்லை — சிந்தை
செயலற ஓய்ந்ததடி
சோகம் பெரிதாச்சு — நானதை
சொல்ல ஓர்சொல்லுமுண்டோ.

6. துயரக் கடலடியில் — சகியே
சோர்ந்து கிடக்கையிலே
பயமும் பெரிதாச்சு — மரணம்
பற்றவ ருகுதென்றே.

7. யாரு மறியாமல் — சிவனே
மாள விதித்தனையோ
தேரும் வகையறியேன் — சிவனே
தேற்றநீ வாராயோ.

8. கண்களை மூடிவிட்டேன் — ஒன்றும்
கருத்தி லுதிக்கவில்லை
மண்டிய திண்பயமே — எனக்கோர்
மாணத் துணையாச்சு.

9 சற்று மறியாமல் — எங்கேயோர்
சப்த மூண்டாச்சுதடி
உற்றுற்றுப் பார்க்கையிலே — உள்ளக்
கதவந் திறந்ததடி.

10. இருள்விட் டகன்றதடி — என்னுள்
ஒளிதான் பிறந்ததடி
மருள்விட் டகன்றதடி — மனதில்
மகிழ்ச்சிதான் பொங்கியது.

11. விழித்தே இருந்தாலும் — வெளிவர
வழி தெரிவதில்லை
வழிதான் தெரிந்தாலும் — மனதுதான்
உள்ளன்றிக் காண்பதில்லை.

12. மனது மலர்ந்ததுவும் — மிக்க
மகிழ்ச்சிதான் பொங்கியதும்
எனதுயர் செல்வச்சிறு — ரமணனென்
சிந்தை நிறைந்ததுவும்

13. எண்ணியெண்ணிப் பார்த்தாலும் — அதனை
எண்ணவும் கூடவில்லை
கண்மணி மைந்தனையே — யன்றிக்
கருத்து நினைப்பதில்லை.

14 வறுமை மறைந்ததடி — அவனின்
வளமை பெரிதாச்சு
பொறுமை மிகுந்ததடி — மேனியில்
பொன்னொளி விஞ்சியது.

[தொடரும்]

# அன்னை கிருஷ்ணபாய்

## அர்ச்சனை மாலை.

—:—:·:—;—

மன்னன் சிவாஜியின் மகத்தான சேவையால்
உன்னத நிலைபெறும் உத்தம நாட்டில்,
சக்குபா யாவுஞ் சாந்தபா யாவும்
மிக்க புகழுடை மஹாராஷ் டிரத்தில்,
முந்திய பெருமை பிந்துறும் முறையில்
வந்தவ தரித்த சுந்தரி போற்றி!
சோப கிருதுவில் சுபகன்னித் திங்களில்
சோபை விளங்கத் தோன்றினை போற்றி!
துன்புறு மக்கள் தொகுதிக் குதவ
அன்புருக் கொண்டவ தரித்தனை போற்றி!
பிறந்த வுடனே சிறந்த துறவியின்
உறவினைப் பெற்ற உத்தமி போற்றி
வளரும் பயிரை முளையில் தெரியுமெனும்
வாக்குக் கிணங்க வளர்ந்தனை போற்றி!
பத்தாம் ஆண்டில் பிதாவின் பிரிவால்
சித்தவை ராக்யம் சிறந்தனை போற்றி!
பதின்மூன் றளவில் பத்தாவை யடைந்து
பதிவிரதா தர்மம் விளக்கினை போற்றி!!
இருபதாம் வயசில் இறப்பின் மாண்பைக்
குருமூலம் அறியக் கோரினை போற்றி!
ஈசப் பித்து இதயத்தை வாட்டப்
பாசங்க ளெல்லாம் துறந்தனை போற்றி
சித்தா ரூடர் சிவநாமம் அருள
பத்தி சாதனைகள் பயின்றனை போற்றி!
அத்தவத் தானும் அமைதி கிட்டாமையின்
உத்தம குருவைத் தேடினை போற்றி!
தென்கன் னடஞ்செய் சிவபுண் ணியத்தால்,
உன்னத மாய்வங் துலசில் இருள்கடி
முனிராம தாசரின் முளரித்தா ளடைந்து,
இனித்துய ருறுநிலை எய்தினை போற்றி!

அன்னவர்க் கன்னையாய் அருகினி லமர்ந்தே
பன்னருஞ் சேவை புரிந்தனை போற்றி!
மன்பதை முழுதையும் மக்களாய்க் கருதி
உன்செல்வர் பாசம் உதறினை போற்றி!
சின்னக் குணமுடைச் சிறுநெறி யாளரால்
இன்னல்கள் பற்பல எய்தினை போற்றி!
இன்னா செய்தார்க் கினியவே செய்வதில்
தன்னிக ரில்லாத் தற்பரை போற்றி!
ஓதா துணர்ந்த மூதறி வுடனே,
கீதை போதிக்குநிஷ் காமிய கர்மப்
பாதையை வாழ்வால் விளக்குவாய் போற்றி!
ஆதர வில்லா ஹரிசனங் கட்கு
மாதா வாய்ப்பணி புரிவாய் போற்றி!
ஆனந் தாஸ்ரமாம் அருள்நிலை யத்தில்
ஞான மழைபொழி நாயகி போற்றி!
தன்பெருமை யறியாத் தனிப்பெரு மாட்டி!
உன்பெருமை உரைத்தல் எவர்க்கும் அரிதாம்.
ஓயாக் கவலையால் உளம்நைந் துருகிச்
சேய்போல் வந்துன் சேவடி யடைந்து,
நீயே கதியென நிற்கும் அன்பர்தந்
தாயே கிருஷ்ணா பாயே போற்றி!
அன்பே போற்றி அழகே போற்றி!
இன்பே போற்றி! இறைவி போற்றி!
அறிவே போற்றி! ஆற்றலே போற்றி!
குறியே போற்றி! குணமே போற்றி!
நிறைவே போற்றி! நீதியே போற்றி!
பொறையே போற்றி! போதமே போற்றி!
பணியே போற்றி! பயனே போற்றி!
துணையே போற்றி! தாய்மையே போற்றி!
சக்தியே போற்றி! சாந்தமே போற்றி!
சித்தியே போற்றி! சிவையே போற்றி!
நாரணி போற்றி! நாயகி போற்றி!
பூரணி போற்றி! புரந்தகி போற்றி!
போற்றி! போற்றிநின் பூங்கழல் போற்றி!!!

# அருளே அன்னை

—:—:-:—;—

(விசாகர்)

இருக்குமிடத்தில் இருந்தே யாத்திரையைத் தொடங்கவேண்டும். இதை மறுக்கமுடியாது. ஆட்டத்தில் இருக்கிறோம், அறிந்தோ அறியாமலோ விரும்பியோ விரும்பாமலோ ஒருவித அமைதியைத் தேடுகிறோம் ஏனெனில் அதுவேதாக்கற்றசுயஇன்ப நிலை. ஆடும் பிரம்மன் சிவன் என்பதும் மகாத்மாக்களின் அனுபவ உண்மை விளக்கும்.

அழியாத நித்தியமான மாறுபடாத ஒரு சுகத்தையே சீவர்களெல்லாம் நாடுகின்றன தேடுகின்றன: ஆனால் பாதையில் தோன்றும் சிற்றின்பங்களைக்கண்டு மயக்குறாது உள்ளம் வேட்கும் உண்மை அறிவின்பத்தைப் பெறுபவர் மிகச்சிலரே. அதை அதுவாகக் காணாமையே மயக்கமெனப்படும். அதை அதுவாகக் காணும்வரை இன்பவேட்கை சென்று கொண்டே இருக்கும். மயக்கம் தெளிந்ததும் உள்ளது உள்ளபடி தோன்றும்.

மனம் புத்தி சித்தம் அகங்காரம் எல்லாம் மட்டுப்பட்ட மட்டுப்படாத ஒன்றை அறிவதெப்படி? பெறுவதெப்படி? எல்லாப்பக்கங்களாலும் ஓடி அலைந்து அலுத்து 'அருள்' ஒன்றினாலே தான் தான்தேடும் பொருள் கிட்டுமென்று முடிபுக்கு வருகிறது

"நானென்ற மாயை நலிய நலியவுனைத்
தான் கொண்டு போற்று மருட்டாய்" [யோகசித்தி]

அருளைப்பெறுவதற்குச் சுத்தமான உண்மை அன்பே காணிக்கை' இவ்வித அன்பு உள்ளவிடத்தில் நிபந்தனையற்ற பூரணமான அர்ப்பணம் நிலவும். இங்கே 'நான்' 'எனது' என்னும் அகங்கார மமகாரங்கள் ஒழியும். ஆகவே அன்பு அர்ப்பணம் அகங்காரநாசம் எல்லாம் ஒரு பொருளையே குறிப்பனவென்று தெரிகிறது.

இறையருளின் தோற்றமே குருவடிவு. இதனாலன்றோ மணிவாசகப்பெருமான் "நிலந்தன்மேல் நீள் கழல்கள் காட்டிய தத்துவன்" என்றும் "மெய்தரு வேதியனாகி வினைகெடக் கைதரவல்ல

கடவுள் போற்றி'' என்றுங் கூறியுள்ளார். இவ்வடிவங்களே அவதார புருஷர்களும் ஜீவன் முத்தர்களும். உலக சரித்திரத்தில் இத்தகைய மகான்கள் இடையறாது தோன்றி வந்திருக்கிறார்கள். அன்னவர்கள் இல்லாதகாலம் ஒருபோதுமில்லை எனலாம். அறம் இல்லையேல் உலக ஒழுங்கு சீர்குலையும். உலகிற்கு அறவொளி தருபவர் அறவோர்களே

"அறிதற் கரிதை அறவோர் அறிந்துலகில்
அறவொளி யாவா ரவர்'' (யோகசித்தி)

அறிவினால் ஆராயக்கூடிய புலமைகட்கு அபிப்பிராயங் கூறுதல் எளிது. ஆனால் அறிவிற்கும் அப்பாலான ஆத்மஞானத்தை அளிக்கக்கூடிய ஞானகுருவின் தன்மையையும் அவசியத்தையும் சொல்லாமல் முற்றாக விளங்கமுடியாது. ஒரு ஆசிரியரின் தேவை மாணாக்கனுக்கு அவசியமானது போன்ற சில உவமானங்களைக் கொண்டும், லட்சியத்தை அடைந்தவர்களின் அனுபவத்தைக் கொண்டும் ஞானகுருவின் அவசியத்தைப் பொதுவாக விளக்கலாமேயல்லாமல் ஞான குருவை அடைந்தவன் அவ் வவசியத்தை உணரும் அளவிறகு அதைத் தெரியப்படுத்தவியலாது. கடவுளை எப்படிச் சொல்லால் விளக்க முடியாததோ அதுபோலவேதான் கடவுள் அருளாகிய ஞானகுருவையும் சொல்லால் விளக்கமுடியாதது.

''நேசம் பதிந்துள்ளே நின் றுருகி நெஞ்சாரப்
பேசினாற் பேசும் பிரான்'; (யோகசித்தி)

உண்மையன்பும் வேட்கையில் ஆர்வமும் இருப்பின் இம் முயற்சி வீணானதல்ல பிழையானதல்ல என்பது தெரியவரும்.

உலகத்தில் நாம் பார்க்குஞ்சமயங்களெல்லாம் ஒரு குருவின் பெயரினாலோ அல்லது குருவழிபாட்டை வற்புறுத்துபவனவாகவோ தானிருக்கிறது. ''லாஹி லாஹா இல்லல்லாஹா முகம்மது றசூலுல்லாஹி'' ''இயேசு ரட்சகர்'' 'புத்தஞ் சரணங் கச்சாமி'! குருப்பிரம்மா குரு விஷ்ணு குருதேவோ மஹேஸ்வர: குரு சாட்சாத் பரம்பிரம்மா தஸ்மை ஸ்ரீ குருவே நம:,'' என்று அவைகுருவணக்கஞ்செய்து போற்றுகின்றன.

"மூர்த்தி ஸ்தலந் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல்லச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே"

என்கிறது தாயுமான உபநிடதம்.

இவ்வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் இறையருளைப் பெற்று நாம் தேடுஞ்சுகத்தை அடைவதற்கே. அன்பில்லாத வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் இல்லை. அன்பு சகலமக்கட்குஞ் சாதிகட்குஞ் சமயங்கட்கும் பொதுவானது. ஏன், சடப்பொருள்களுக்குத்தானுங் கவர்ச்சி என்னுஞ் சக்தி இல்லையேல் அவை தோற்றம் அளிக்கவேமாட்டா. சுருங்கச்சொல்லின் உலகம் முழுவதுமே அன்பின் தோற்றம். இத்தனை பொதுமையான அன்பிற்கு உரிமையுள்ளதும் ஒரு பொதுப்பொருளே அதை 'அன்னை சக்தி' என்றுகூறுவர்.

"எல்லார்க்கும் ஓரன்னை ஈசனருளன்னை
எல்லாரும் ஓர்குல மென்றெண்" (யோகசித்தி)

விலங்குகள் பறவைகளிடத்திலும் இந்தத் தாயன்பை நாம் தெளிவாகக் காணலாம். சாயைப்போல அன்புந் தயையும் ஒருங்கே அமையப் பெற்ற உறவை நாம் வேறெங்குங் காணமுடியாது. நாமெல்லோரும் ஒரு தாயின் குழந்தைகள் என்று உணர்ந்ததும் உள்ளத்தில் அன்பும் ஒற்றுமையும் இயல்பாகவே பிறக்கிறது. அன்பையும் ஒற்றுமையையுமே அஸ்திவாரமாகக்கொண்டு சமயங்களும் ஏற்பட்டிருக்கின்றனவே. நாம் எந்த விதமான பிழைகளைச் செய்தபோதிலும் அவைகளைச் சலியாது பொறுத்துத் திருத்தி அணைப்பவள் எம்மை ஈன்றவளே. எதையுந் தெரியாதிருக்கலாம் ஆனால் தாயின் பெருமையை அறியாதார் இருக்கவே முடியாது. தாயன்பின் பெருமையையும் தூய்மையையும் உணர்ந்தே இறையருளைத் தாயாக வணங்க மக்களிற் பெரும்பாலார் தூண்டப்படுகிறார்கள். "அருள்புரிந்தருளும் அரசாசிய" குருவை அடையும் பாக்கியம் பெற்றவர்கள் அது அன்னை வடிவாக இருக்கக்காண்பின் அவர்கள் ஆனந்தத்திற்கு அளவுமுண்டோ.

உலகெலாம் ஈன்றருளுந்தாய் எம்மையும் ஈன்றவளே. "உன்னை நான் மறந்தாலும் நின் அருள் என்னை மறவாது" என்ற தைரியமும் 'எமக்கொருதாயுண்டு' என்னும் நம்பிக்கையும்சாதகனை மேலும் மேலும் உறுதிப்படுத்தி ஆத்மீக வேட்கையில் தீவிரமாக முன்னேற்றச் செய்கிறது. சுதந்தரத்தோடும் உரிமையோடும் தாயு டன் பழகுகிறான்: இந்த நிலையில் அவன்,

"அருள்புரிவாய் எமக்கென்றே ஆர்வமுடன்
அடிபணியும் அன்பர் தம்மைத்
திருவருளுக் காளாக்கித் தீவினைதீர்த்
துன் மருங்கிற் சேரச் செய்வாய்
இருள்மனத்தர்க் கறிவரிய இடமதனில்
நடமாடுந் தெய்வச் சோதி
குருமணியாய் அடியேனை வலிய அழைத்
தாட்கொண்ட கிருஷ்ண பாயே.!!! (க. இ.

என்று விழிக்கிறான். பெற்றதாயினை மகமறந்தாலும் பிள்ளையைத் தாய்மறப்பளோ? இல்லை. ஆதலால் 'வலிய அழைத்தாட் கொண்ட'வளிடம் 'அருள் புரிவாயெமக்கு' என்று சுதந்தர உரிமைத்தொனி ஒலிக்கக் கேட்கிறான். வலிய அழைத்ததாயின் சந்நிதானத்தில் நிற்பதால், 'ஆர்வமும் பணியுந்' தோன்றுகிறதேயல்லாமல் அச்சமுங் கிலேசமுங் காணப்படவில்லை. இனி எங்கும் நிறைந்தவளுக்கு 'மருங்கு எங்கே உளது. ஆடும் பிரம்மனுக்கு அமர்ந்த பிரம்மனே உள்ள ஒருதனிமருங்கு. அந்த மருங்கிலே தான் எம்மையுஞ் சேரச்செய்கிறாள். சாதாரண உலக வாழ்விலுங் கூட "அதோ உன் அப்பா" என்று தந்தையைத் தன் குழந்தைக் குத் தாய் காட்டுவதை நாம் அறிவோம். அதுபோலவே எமது தெய்வத்தந்தையையும் அருளன்னையே காட்டித் தருகிறாள். சூரியன் உதித்ததும் இருள் அகலுகிறது. சூரியனின் அருளாகிய ஒளியைக்கொண்டே சூரியன் உதித்ததை அறிகிறோம், அதை அனுபவிக்கிறோம். அதுபோலவே இறைவனருளாலே [குரு] இறைவனை உணர்ந்து இறைவனை அனுபவிக்கப்படுகிறது.

இன்னல்களும் இடையூறுகளும் பாரதத்தாயை மெலியச் செய்தனவே அல்லாது, தன் சொந்த – சுதந்தர–நித்திய - ஆனந்த நிலையிலிருந்து பெயர்க்கமுடியவில்லை என்பதை இன்று நாம்காண்

# தாயே.

[முத்து]

அன்பு என்ற போதிலேயே தாயுள்ளத்து ஊற்றெனப் பெருகி வழியும் அன்பே நம்மனக் கண்முன் தோற்றமளிக்கிறது. நாம் எல்லோரும் முதன் முதல் கண்டுவியந்த அன்பும் தாயன்பல்லவா? நமது யுகமூர்த்தியாய் விளங்கும் ஸ்ரீராம கிருஷ்ணரும் இவ்வுண்மையை வலியுறுத்தவன்றே இறைவனை அன்னையெனப் பாவித்து வழுத்தலானார். ஐந்து வயதினிலே அறியாப் பராயத்திலே கவிமலர் பூத்தயோகி சுத்தானந்தரும்,

"அம்மா பரதேவி தயாபரியே
சும்மா உலகின் சுமையாக இரேன்" என்கிறார்.

ஸ்ரீ இராமபிரானை ஓரிடத்தில் "தீமனத்தரக்கர் திறல் அழித்தவனே என்று சென்றடைந்தவர் தமக்குத் தாய்மனத்திரங்கி அருளினைக்கொடுக்கும் தயரதன் மதலை" என்கிறார் ஒரு பெரியார்.

---

முற்றொடர்ச்சி,

கிறோம். அவதார புருஷர்களும் ஜீவன்முத்தர்களும் தபஸ்விகளும் பாரதமாதாவின் ஆத்மீகக்கோட்டையை இடையறுது காவல் புரிந்ததோடல்லாமல் காலத்திற்கேற்ற முறையில் புதுப்பித்து வந்ததுமே இந்நிலைக்குக் காரணமாகும்: இன்னறய உலகஞ்செய்த தவப்பயனால் இந்தியாவின் நாலாபக்கங்களிலும் தபஸ்விகளையும் தவ நிலையங்களையும் நாம் காணக்கூடியதாயிருக்கிறது. தென் கன்னடம் ஆனந்தாஸ்ரமம் இத்தகைய தவநிலையங்களிலொன்று. இறையருள் தாய்வடிவில் தூய அன்னை கிருஷ்ணபாயாகக் காட்சியளிக்கிறது இவ்விடத்தில். இறையருளைத் தாய்வடிவில் வணங்கும் பெருமையையும், இனிமையையும் தூயஅன்னையின் திருவடி தீண்டப்பெற்றோர் நன்கு உணர்வர்.

"உன் பொற்றிருமுகத்தை யுள்ளும் புறமுங்கண்
டின்புற்றிருக்க வருள்." (யோகசித்தி.)

தாயின் திருவடி என்றும் வாழ்க!!!

இதிலிருந்து சரணகதிசெய்து பெற்றபேறு இராமாயணத்துள் பொன்னெழுத்தால் எழுதப்பெற்றபகுதியாகும். இவ்வாறு தாயன்பு காட்டி இரங்குந்தன்மையே முழுமுதற் கடவுளுடைய குணங்களுள் மிகச்சிறந்தது. தேவார திருவாசகங்களுள் இது மிகப்பாராட்டப்படுகிறது.

"தாயினும் நல்ல தலைவர் என்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்" என்று திருஞான சம்பந்தரும்,

"ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்" என்று திருநாவுக்கரசு சுவாமிகளும்.

"பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளிபெருக்கி" என்று மாணிக்கவாசகரும் இந்தத் தாயன்பினைப் பாராட்டி உள்ளனர்;

தாயோடு கொஞ்சிப் பேசவேண்டுமென்பதுதான் குழந்தைகளின் தீவிரமான பேரவா. அது பேசவும் செய்கிறது. இதனுடைய மொழிகளெல்லாம் உளறல் குளறலாக இருப்பினும் அதனுடைய மழலைமொழிகுழலையும் யாழையுங் கூடத்தோற் கடிக்கிறதல்லவா?

அம்மா நான் உன் குழந்தை, நீ என்தாய் தகாததைச்சொன்னாலும் பொறுக்கவேண்டியவள் நீ. உன் குழந்தையின் பொருட்டுப்பாடான பாடுகளையெல்லாம் முகஞ்சுளுங்காமல் நீ அனுபவிக்கிறாய், குழந்தை மூலம் ஏற்படுகிற கஷ்ட நஷ்டங்களெல்லாம் தாய்க்குப் புன்னகைப் பூரிப்பையே தருகின்றன.

தாய் பொறுமை வடிவம். பூதேவி பொறுமைக்கரசி. பூதேவியின் மடியிலிருந்தே தாய் உற்பவிக்கிறாள். பலவிதத்திலும் தொந்தரவு கொடுக்கும் ஒரு ஜீவனை, ஒருதினமல்ல, இருதினமல்ல பல நூறுதினங்கள் திருவயிற்றிலே வைத்துக்காக்க எவ்வளவோ பொறுமை எவ்வளவோ கருணை வேண்டும்.

காய்த்த மரந்தானே கல்லடி படுகிறது; நல்ல பழமோ கூடாத பழமோ என்று சொல்வதால் பெருமையோ சிறுமையோ மரம் அடைகிறதா? இன்பமும் துன்பமும் ஞானிக்கு இல்லையல்லவா?

தாயும் அப்படித்தான் பொல்லாதசேய் அம்மா நீ கெட்டவள் பட்சபாதமுடையவள் அன்பில்லாதவள் என்று குறைகூறுகிறது. திவ்யமாதா புன்னகை புரிகிறாள்.

இன்னொரு குழந்தை நல்லஅம்மா நீ என்று நற்சாட்சிப்பத்திரம் வழங்குகிறது. அதைக்கேட்டு அம்மா களிவெறிகொள்கிறாளா? இல்லை. அந்த மொழிக்கும் அமைதியான ஓர் புன்னகைதான்,

தெரியாமலா உள்ளத்திலே உண்மை ஒளிகண்ட பெரியோர்கள் "மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்" என்று போதித்தார்கள். மாதா நினைவு ஏற்பட ஏற்பட மனதிலேஉற்சாகம் எழும்புகிறது.

சுவாதி நட்சத்திரத்தின் மழைத்துளிக்காகச் சிப்பி வருடக்கணக்காய்த் தவங்கிடக்கிறது, ஒரு துளிபெற்றதும் கடலினடியிலே சென்று விடுகிறது. அத்துளி முத்தானதும் மாந்தர் நூறாயிரம் விலைபோட்டு மன்னரின் மகுடத்தை அலங்கரிக்கின்றனர். தாய்ச் சிப்பியையாராவது தேடுகிறார்களா? தன்னையாரும் தேடவில்லையே யென அது கோபங்கொள்ளுகிறதா

அன்பு வடிவாகி நிற்பவள்
துன்பெலாம் அவள் இழைப்பவள்
ஆக்கநீக்கம் யாவும் அவள் செய்கை
அவள் ஆனந்தத்தில் எல்லையற்ற பொய்கை"

என்கிறார் ஒரு பெரியார்.

ஸ்ரீராமன் அன்னை கைகேயியின் வாக்கின்படியே வனம்சென்றான். பஞ்சபாண்டவர்கள், தாய் குந்திதேவியின் திருவாக்கைப் பரிபாலனம் செய்த விதம் மண்ணுமறியும் விண்ணுமறியும். ஸ்ரீ துருவன் இன்று வானவெளியிலே நட்சத்திரமாக ஜொலிப்பதற்கு முக்கிய கர்த்தாவாக இலங்கியவள் தாய் சுருதிதேவிதான்.

உலகில் எத்தனையோ மகானுபவர்கள் உண்டு. ஆனால் அவர்களெல்லாரும் பேசுந்தெய்வமான தாயாகவே மேன்மைப்படுத்தப் பட்டவர்கள். வாழ்க்கையிலே தாயின் உன்னதஸ்தானத்தை மேன்மைப்படுத்திப் பேசும்பொருட்டே ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் எல்லாம் வல்ல இறைவனை தாயாகித் தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வம் என்கிறார். கெட்டமகன் பிறக்கலாம் கொடியதாய் இல்லையல்லவா? என்கிறார் ஸ்ரீ சங்கர்.

மாத்ரு பாவத்தையே சிறந்தது எனக்கொண்ட மகான் ஸ்ரீராமக்கிருஷ்ணர் தாயைப்பின்வருமாறு பிரார்த்திக்கிறார்.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம் உன்மேல் உண்மை அன்பு ஆசைகளால் மாசடையா அன்பு உலகப்பொருள்களால் கேட்டை அடையாத அன்பு.

அம்மா உன் குழந்தை நான், உலகமோகங்களினுல் நான் உன்னை மறந்துவிடக்கூடாது. பொன்மேலோ போகத்தின்மேலோ நான் ஆசைகொள்ளக்கூடாது. இந்தவரங்களை எனக்குநீதா தாயே!

தாயே! நீதீனபந்து. அடித்தது ஒருகரமானுல் அணைத்தது உனது திருக்கரம். தாயே அணைத்த அந்தத் திருக்கரங்களிலே தான் இன்றளவும் நான் தலைசாய்த்து ஆறுதல் பெறுகிறேன்.

என்னருமைத்தாயே உன்பாதாரவிந்தங்களில் உண்மையான பக்தியை எனக்கு அளி. நான் வேறெதுவும் வேண்டேன். என்னிடமுள்ள யாவற்றையும் எடுத்துக்கொண்டு உன் பாதகமலங்களில் திடமான பக்தியை மட்டும் எனக்கருளுவாயாக.

## கதிர்காமத்திருப்புகழ்,

தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன—தனதான

ஐந்துகரத் தந்திமுக சுந்தரநு தற்கடவுள்
சொந்தமான தம்பியென வந்தசீலா
வந்தனை செயுமடியர் புந்தியில் நினைந்தவர்கள்
சந்ததமு மீந்தருள்செய் வள்ளிநாதா
எந்தையெழிற் கண்ணிலொரு செந்தழலாய் வந்தருளி
கொந்தலர் சரவணத்தில் வளர்வோனே
சிந்துர நுதற்சிறுமி சுந்தரி அணைக்கவரு
செம்பவள மேனியுடைச் செய்யவேளே
கொந்தலர் கடம்புபுனை மந்த்ரமலை யாகவளர்
சிந்தனைசெய் மார்புடைய செங்கையே
மைந்துவளர் சோலைசெறி இந்துதவழ் ஏழுமலை
சொந்தமென நின்றுநடம் செய்யும்பாதா
இந்ததிரி பூரணையும் இசையும்லுண நாளும்வர
அந்தமணி கங்கையினில் ஆடும்நாதா
சந்ததமும் உந்தனிரு சொந்தபதம் தஞ்சமெனும்
எந்தனை அடிமைகொளும் தம்பிரானே.

—பண்டிகர் ஆ சி நாகலிங்கம்பிள்ளை

# — அற்புதங்களில்மயங்குதல் —
# — — அறிவுடைமையாகாது. — —

(திரு. வி. க)

அற்புதங்களைக்கண்டு, 'தெய்விகம்-தெய்விகம்' என்று மயக்குறுவோர்பலர், அற்புதம்உலகைக் கவர்வதுபோல வேறெதுவும் அதைக்கவர்வதில்லை. 'அற்புதம்' செய்யும் சாமியார்க்கே அதிக மதிப்புச் சா தா ர ண உலகந்தருகிறது. அற்புதத்தை மதிக்கும் பேதமை உலகை விடுத்து அகலுதல் வேண்டும். அற்புத நாட்டம் உள்ளொளிப்பெருக்கிற்குத் துணைசெய்யுமா?

அற்புதம் அரியதா? எளியதா? புறமனச்சூழலில் அகப்பட்டு அலைவோர்க்கு அற்புதம் அரியதாகத்தோன்றும். அம்மனம் ஒடுங்கப் பெற்றோர்க்கு அஃது எளிய - மிகஎளியதாகத் தோன்றும். நடுமனவிளக்கம் பெற்றவரிடம் அற்புதம் எளிதில் நிகழ்தல்கூடும்

ஒருவர் ஒருபோது ஏதோசில காரணம்பற்றி அ ற் பு த ஞ் செய்தார்: அவரே உள்ளொளிக்குரிய ஞான போதனையுஞ் செய்தார். இரண்டில் சிறந்தது எது? அற்புதமா? போதனையா? போதனையென்றே யான் பறைசாற்றுவேன். அற்புதத்திற் கருத்தைச் செலுத்தினல் உள்ளொளிக்குரிய வேட்கை எழுதலும் அரிதாகும். யோசனையிற்கருத்தைச்செலுத்தி அதன்படி சாதனைசெய்து வந்தால் உள்ளொளி ஊற்றுத்தானே திறக்கும்.

கிறிஸ்துபெருமான் திருஞானசம்பந்தர் உள்ளிட்ட பெரியோரும் அற்புதங்கள் செய்திருக்கிறாரே' என்று சிலசகோதரர் நினைத்தல் கூடும். அற்புதங்கள் அவரைப்பெரியவராக்கவில்லை. என்றும் அவரது ஞானபோதனைகள் அவரைப்பெரியவராக்கின எ ன் று ம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்து பெருமானும், திருஞானசம்பந்தரும், மற்றவரும் த ம து வாழ்நாள் முழுதும் தாமே வலிந்து அற்புதஞ்செய்து திரிந்தாரில்லை; அற்புத விளம்பரஞ்செய்தாரில்லை; அற்புதத்தை அவர் அ வா வி ய து மி ல்லை; அவர்காலத்திலும் நோய்கள் நடமாடின; மரணங்கள் நிகழ்ந்தன; காலன் ஆட்சி நடைபெற்றது. சில போழ்து இ ர க் க ம் முதலிய காரணம்பற்றிப் பெரியோர்பால் அற்புதம் நிகழ்ந்துவிடும். அற்பு

தமே அவர்க்குப் பெருமை அளித்ததென்று அதற்கு மதிப்பளிப்பது வாழ்வைப் பாழ்படுத்துவதாகும். அற்புதங்களைக்கொண்டு பெரியோர்க்கு உலகம் மதிப்பளித்தலைக் கண்ட பௌராணிகம் அற்புதக் கதைகளைப்பெருக்கி விட்டது.

இராமலிங்க சுவாமிகள் சமீபகாலத்திலிருந்தவர். அவர் தம் அரிய போதனைகளடங்கிய 'அருட்பா' பலரால் பதிக்கப்பட்டுள்ளது. முற்பதிப்புக்களில் காணப்படாத அற்புதங்கள் பிற்பதிப்புக்களில் காணப்படுகின்றன. இதனால் விளைந்ததென்னை? விளைவுகளை விரிக்கில் பெருகுமென்று அஞ்சுகிறேன். இப்பொழுது நாட்டில் இராமலிங்கசுவாமிகளின் 'அவதாரங்கள்' பெருகிவருதலை மட்டும் ஈண்டுக்குறிக்க விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த அளவில் பதினொருவர் தம்மை இராமலிங்கசுவாமிகள் என்று கரந்து கரந்து சொல்லித்திரிகின்றனர்; மக்களை ஏமாற்றுகின்றனர். இவருள் எவர் உண்மை இராமலிங்கசுவாமிகள் என்று தெரியவில்லை. ஒருவர் மற்றொருவரைப் போலிஇராமலிங்கரென்றும் இவர் அவரைப் போலியென்றும் வாதமிட்டுவருவதும் ஒருவித அற்புதம் போலும்! ஆகவே பெரியோரின் அற்புதத்தின் வேட்கை கொள்வது உள்ளொளிக்கு ஆக்கந்தேடுவதாகும். ........................ விஞ்ஞானக்கலைகள் பெருகிவரும் இந்நாளில் அற்புதங்கட்குமதிப்பளித்தல் ஆன்மஞான முயற்சிக்குக் கேடு சூழ்வதாகும், கண்ணொளி இழந்தவர் மூக்கொளியால் காண்டல், இளமையோடிருத்தல், எஃகையும் பொன்னாக்கல் முதலியன விஞ்ஞான உலகில் நுழைந்துவரும் இந்நாளில் அற்புதத்தில் மயங்குவது அறிவுடைமை யாகாது.

சித்தத்தின் சாந்தியதே சித்தமா முத்தியெனிற்
சித்தத்தின் செய்கையின்றிச் சித்தியாச் — சித்திகளிற்
சித்தஞ்சேர் வாரெங்ஙன் சித்தக் கலக்கந்தீர்
முத்திசுகந் தோய்வார் மொழி.

—ஸ்ரீ ரமணபகவான்.

---

கார்ப்புயலை வெட்டுகின்ற கம்பி மின்னல் போலே,
கலையிருளோட்டியென்னைக் கண்டார்த்து நின்றாள்
யாரென்றே யதிசயித்தேன்! அழகுமணித் தெய்வம்!
அன்னைசக்திவாழ்கவென்றேபொன்னடியிற்பணிந்தேன்

சுத்தானந்தர்.

# ஆண்டாள் கண்ட கனவு.

பி, ஸ்ரீ

நாட்டின் பலபாகங்களிலுமிருந்து கடல்போலத் திரண்டு வந்தது ஜனக்கூட்டம். நகரவாசிகள் தெருக்களில் பூம்பந்தல் மகர தோரணம் சித்திரக்கொடி முதலிய அலங்காரங்கள் செய்தார்கள். வாழைகளும் கமுகுகளும் அணியணியாக நாட்டப்பட்டன. மாளிகை முகப்புகள் பல நிறமுள்ள பூமாலைகளாலும், மணிவிளக்குகள் மணிக்கண்ணடிகள் முதலிய மங்களப் பொருள்களாலும் அலங்கரிக்கப்பட்டன. பூம்பட்டாடைகள் சுற்றிய பொற்குடங்கள்மீது தேங்காய்களும் மாந்தளிரும் திகழ்ந்தன. சிலர் சந்தனக் குழம்போடு, வேறுவாசனைப் பொருள்களையும் சேர்த்துத் திண்ணை மெழுகினர்கள்; தெருக்களில் தெளித்தார்கள்; வில்லிபுத்தூர் அழகு மயமாகவும் ஆனந்த மயமாகவும் விளங்கியது.

ஜனங்கள் நகரத்தை அலங்கரித்ததோடு தங்களையும் அலங்கரித்துக் கொண்டார்கள், பெண்கள் மஞ்சனம் ஆடுவாரும் விழிகளில் மை எழுதுவாரும் மேகலை முதலிய ஆபரணங்களை அணிவாரும் கூந்தலில் பூக்களை வைத்துப் பின்னிக் கொள்வாருமாகக் காணப்பட்டார்கள். சில பெண்கள் பிறைச்சந்திரனைப் பழிக்கும் நெற்றியில் வட்டமாகத் திலகமிட்டுக்கொண்டுவந்தார்கள். சிலர் குறுநகைபுரிந்து மயிலைப்போல வந்தார்கள், சிலர் அம்மானை ஆடினர்கள்; பந்துவிளையாடினர்கள்; சிலர் உல்லாசமாய் ஊஞ்சலாடிக்கொண்டிருந்தார்கள். சிலர் ஆண்டாளைப்போல் சித்திரம் எழுதிப்பார்த்தார்கள். இவள் புருஷனை எப்படிச் சித்திரிப்பதென்று திகைத்தார்கள் சில பெண்மணிகள். சிலர் இசைபாடினர்கள். சிலர்.

"தேமருவு மலர்க்கோதை வந்தாள்; வந்தாள்;
திருப்பாவை பாடினள் வந்தாள்; வந்தாள்!"
அன்னநடை மின்னிடையார் வந்தார்; வந்தார்!
ஆழ்வார்தம் திருமகளார் வந்தார்! வந்தார்!
"அனைத்துயிர்க்கும் அன்(பு) அருளி ஆண்டாள் வந்தாள்"

என்றும், வேறுசிலர்,

"வேதநாயகி வந்தாள்! வேள்விநாயகி வந்தாள்!
கோதைநாயகிவந்தாள்! கோலநாயகி வந்தாள்!
போதநாயகி வந்தாள்! பூமிநாயகி வந்தாள்!
நாதநாயகி வந்தாள்! ஞானநாயகி வந்தாள்!."

என்றும் வாழ்த்துப் பாடினார்கள். 'கோதையை மணந்துகொள்ளும் நாயகன் பாக்கியசாலி' என்றார் பலர்.

பெரியாழ்வார் மாளிகைமுன் மாணிக்கக் கால்நாட்டிப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. மணம் செய்வதற்குவேண்டிய உபகரணங்களெல்லாம் சேகரிக்கப்பட்டிருந்தன. மங்கள வாத்தியங்கள் ஒலிசெய்தன. நடனமாதர்கள் நடனஞ்செய்தார்கள். தோழிகள் வாஸ-மஞ்சனம் ஆட்டி இவளுக்கிசைந்த ஆபரணங்களாலும் பூமாலைகளாலும் பூவைப்போல் மென்மைவாய்ந்த பட்டாடையாலும் அலங்காரஞ் செய்தார்கள்.

"முகூர்த்தம் சமீபித்துவிட்டதே மணவாளன் எப்போதுவருவான்?" என்று ஜனங்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். "அவன் இங்கே வருவதும் உண்டோ?" என்று சிலர் சந்தேகித்தார்கள். வேறுசிலர் ஆழ்வாரை நோக்கி, 'வருவது உண்மைதானா?' என்று கேட்டார்கள். அப்போது அவர் 'எம்பெருமான் மாயத்தை ஏழையேன் அறிவேனோ? என்று சொல்லிப் பெருங்கவலையோடு ஆண்டாள் முகத்தைநோக்கினார். அவளோ,

"வந்தானோ! திருவரங்கன் வாரானோ!
என்றென்றே வளையும் சோரும்"

என்றநிலையில் ஒவ்வொருகணமும் காதலனைப் பேரவாவோடு எதிர்பார்த்தவண்ணமாயிருந்தாள். "இன்னும் தாமதம் செய்தால் எப்படி உயிர் தரிப்பேன்? மணம் இல்லையென்றால் மரணந்தான் கதி எனக்கு" என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டாள்.

உடனே ஆகாயமளாவிய மணப்பந்தலுக்குள் நீல ஜோதி ஒன்று உதயம் செய்ததுபோல், பகவான் மணவாளக்கோலத்தோடு தோன்றுகிறான் விண்ணும் மண்ணும் ஒருங்கே தொழுது புகழ்கின்றன அந்த அழகிய மணவாளனை, ஆழ்வார் ஆனந்த பரவசராய் 'என் அருமைத் திருமகளாகிய ஆண்டாளை உமக்குக் கன்னிகாதானம் செய்கிறேன்' என்று தாரைவார்த்துக் கொடுக்கிறார். மணப்பெண், நீலநிறமுள்ள சித்திரப் பொற்பட்டாடையும் செங்கழுநீர்மாலையும் நெற்றியில் கஸ்தூரித் திலகமும் தெய்வீக அழகு பெற்று மிளிரும் கண்களுமாய், வளையும் சிலம்பும் ஒலிசெய்ய நடந்துவந்து காதலனுக்கு அருகே வீற்றிருக்கிறாள்.

மணச்சடங்குகள் இனிது நடைபெறுகின்றன. மணவாளன் ஆண்டாளின் மலர்க்கைபிடித்ததன்றி, அவள் அடிகளையும் பிடித்து அம்மி மிதிக்கச்செய்கிறான். ஆண்டாள் மணவாளனோடும் யானைமேல் ஊர்வலம் வந்த காட்சியைக் கண்குளிரப்பருகிய ஜனங்கள்.

'ஜய! ஜய!' என்று கோஷிக்கிறார்கள், பெரியாழ்வார் பல்லாண்டு பாடுகிறார்! சுமங்கலிகள் மங்களம் பாடுகிறார்கள்.

ஆண்டாள் ஆச்சரியத்தோடு கண்ணை விழித்தாள். பக்கத்தில் தோழி ஒருத்தியிருந்தாள். அவளை நோக்கித்தான் கண்ட அற்புதமான கனவையும் அதிலே அனுபவித்த ஆனந்தமான திருமண வைபவத்தையும் சொல்லத்தொடங்கினாள். காதலர் மனங்கள் ஏற்கனவே கலந்துவிட்டன. காவேரி சமுத்திரத்தோடு கலப்பதுபோல், இவளும் அழகிய மணவாளனாகிய ஸ்ரீரங்கநாதனைக் கைப்பிடித்தது அவனோடு கலந்துவிட்டாளென்று குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன. ஆழ்வாரோ,

"ஒருமகள் தன்னை உடையோன்; உலகம் நிறைந்த புகழால் திருமகள்போல வளர்த்தேன், செங்கண்மால்தான் கொண்டுபோனான்" என்று சொல்லிக்கொண்டே வழக்கம்போல் தமது கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தார்.

ஆண்டாளே தன்னுடைய கல்யாண வைபவத்தைக் கூறிய பின், காதலித்த புருஷோத்தமனை அவள் மணஞ்செய்து கொள்ளவில்லையென்று யார்தான் சொல்லக்கூடும்?

---

## இலக்குமி தோத்திரம்.

உலகம் புரக்கும் பெருமான்றன்
உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகையளிக்கும் பேரின்ப
வுருவே யெல்லாம் உடையானே
திலகஞ் செறிவா ணுதற் கரும்பே
தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டாதன்பர் உளத்துள்ளே
தித்தித்தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகந்தேற் கருளளித்த
வாழ்வே யென்கண் மணியேயென்
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம்
வடிவே ஞானமணிவிளக்கே
சலகந் தரம்போற் கருணைபொழி
தடங்கண் திருவே கண்ணமங்கைத்
தாயே சரணஞ் சரணமிது
தருணங் கருணை தருவாயே.

—இராமலிங்கசுவாமிகள்

# திருக்கேச்சரத் திருப்பணிச்சபை.

நிகழும் விரோதிவருஷம் புரட்டாதி மாசம் 9ம் திகதி(25-9-49) ஞாயிற்றுக்கிழமை மாலை5மணியளவில்தொல்புரம் (வடக்கம்பரை) மாரியம்மன் கோவில் வீதியில், திருக்கேதீச்சர மகத்துவ பிரசாரத் தொண்டிற்காக: மாபெருங் கூட்டமொன்று நடைபெற்றது. திரு, கே. கனகரத்தினம் எம் பீ. அவர்கள் தலைமைவகித்தனர் திருவாளர்கள் சு. சிவபாதசுந்தரம், செ. சின்னத்தம்பி, பொ. முத்துக்குமாரன்; மு. கிருஷ்ணர், என். சேனாதிராசா, இ. இராமலிங்கம், ஆகியோர், இத்தலத்தின் மகிமை குறித்தும், சைவமக்கள் கடமைபற்றியும் பேசினர்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை (2-10-49) ஆறுமணியளவில் வடமராட்சி சைவ ஆங்கில பெண்பாடசாலையில் திரு. வே. அருணாசலம் **B. A** அவர்களின் தலைமையில் ஓர் மகாசபை கூடியது. இக்கூட்டத்தில் வடமராட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர் பங்கெடுத்து, திருக்கேதீச்சரஆலயத்திருப்பணி விஷயத்தில் போதிய ஆதரவு அளிப்பதாகத் தீர்மானஞ்செய்தனர்.

கொக்குவில் சைவாபிமானிகளும் ஓர் பகிரங்கக்கூட்டம் வைத்து இத்தொண்டில் உதவிசெய்ய முன்வந்துள்ளார்கள்.

இத்திருப்பணிச்சபையின் நிர்வாகசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளை அங்கீகரிப்பதற்காக கொழும்பில் சைவமக்களின் பொதுக்கூட்டமொன்று ஒக்ரோபர் மாசம் ஆறுந் தேதி நடைபெற்றதாகவும் அறிகின்றோம்.

## — வீரன் யார்? —

வலிமை, தைரியம், உண்மை நுட்பம்' மரியாதை, தன்னடக்கம் இவற்றைக்கொண்டவனே வீரன். தன்னிலும மெலியான் மீது அவன் தன்கையை ஓங்கான்; பிறர் துன்பத்தைத் தனக்குப் பயன்படுத்திக்கொள்ளான்; புறங்கூறுன்; நண்பனுக்குத் துரோகம் செய்யான். மானமே அவனுக்குச் சட்டம்; மென்மையே அவனுடைய ஆபரணம்; எளியோரிடம் அன்பும் ஆதரவும் காட்டி, ஆபத்தில் அச்சமின்மையைத் தோற்றுவித்து, வெற்றியில் இரக்கத்தைப் புலப்படுத்தி; குற்றம் இழைத்தவரை மன்னித்து குழந்தைகளிடமும், விலங்குகளிடமும் அவன் அன்புகாட்டிவருவான்.

— அன்னிபெசன்ற் அம்மையார்.

# செய்தித் திரட்டு,

## அன்னை கிருஷ்ணாபாயின் ஜெயந்தி

23-9-49 ல் கொழும்பு சத்சங்கத்தாரால் கொள்ளுப்பிட்டியில் கொண்டாடப்பெற்றது. 22-9-49 ல் சாவகச்சேரியில் கொண்டாடப்பெற்றது. 25-9-49 நாவலப்பிட்டி "ஆத்ம ஜோதி" நிலையத்தில் கொண்டாடப்பெற்றது.

## காந்தியடிகளின் ஜெயந்தி

2-10-49 கொழும்பு சத்சங்கத்தாரால் வெள்ளவத்தையில் கொண்டாடப்பெற்றது, ஷை தேதியில் பதுளைச் சைவபரிபாலன சங்க ஆதரவிலும்கொண்டாடப்பெற்றது. ஷை தேதியில் அகில இலங்கை காந்திய சேவாசங்க ஆதரவில் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

## நவராத்திரி

நாவலப்பிட்டி இந்து வாலிப சங்க ஆதரவில் ஒன்பது நாட்களும் ஒன்பது அன்பர்கள் வீட்டில் பிரார்த்தனையுடன் சக்தி பூஜை நடைபெற்றது. கொழும்பு சத்சங்க அன்பர்கள் கொள்ளுப்பிட்டியில் ஒன்பது நாட்களும் பிரார்த்தனையுடன் சக்திபூஜை கொண்டாடினார்கள்.

---

## சதா ஜெபம்பண்ணி விழித்திருங்கள்

மனிதரையும் கடவுளையும் ஒன்றுசேர்ப்பது பிரார்த்தனை பிரார்த்தனையின்மூலம் மனிதன் கடவுளுடன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ளுகிறான். கடவுளின் இஷ்டத்தை செய்யவிரும்புகிறவன் சதா அவனை நினைக்கவேண்டும். மனதிலும், நாவிலும் இலட்சியங்களிலும் அவரைத் துதித்து ஜெபஞ்செய்வதாக இருந்தாலே உங்கள் இருதயங்கள் பெருந் தீனியினாலும், வெறியினாலும், லௌகீகக் கவலையினாலும் ஒருபோதாகிலும் பாரமடையாதபடி எச்சரிக்கையாக இருக்கமுடியும். இல்லையானால் அந்நாள் திடீரென ஒரு கண்ணியைப்போல் உங்கள்மேல் வரும், எப்போதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.

—ஜே, ஸி. குமரப்பா.



உ

# மஹா சரஸ்வதி,

——:-:——

மஹா சரஸ்வதி, அன்னையின் கர்ம சக்தியும், பூரணம், ஒழுங்கு இவற்றின் தன்மையுமாவாள். நால்வரில் இளையவளான அவள், நிர்வாக சக்தியில் மிகத்திறமையுள்ளவள்; தூலவியல்பிற்கு மிகச் சமீபமாயிருப்பவள். மஹேச்வரி உலக சக்திகளின் விசாலமார்க்கங்களையமைக்கிறாள்; மஹாகாளி, அவற்றின் ஆற்றலையும் வேகத்தையும் தூண்டிச் செலுத்துகிறாள்; மஹா லக்ஷ்மி அவற்றின் சந்தங்களையும், அளவுகளையும் கண்டுபிடிக்கிறாள்; மஹா சரஸ்வதியோ அவற்றின்முறை வகுப்பு, நிர்வாக நுட்பம் அங்கங்களின் சம்பந்தம், சக்திகளின் திறமையான பொருத்தம், பலம், நிறைவேற்றம் இவற்றின் தவறாத சரிமுறை இவற்றிற்குத் தலைமைவகிக்கிறாள். எல்லா வித்தையும், கலையும், கௌஸல்பமும் மஹா சரஸ்வதியின் மண்டலமாகும்.

பிரியமுடன் புன்னகைத்து, அருகில் துணைநின்று எளிதிற் பின்வாங்காமல், அல்லது தளராமல், மீண்டும் மீண்டும் தவறினாலும், பிடிவாதமாக அவள் கரம் படிக்குப்படி நம்மைத் தாங்கிச் செல்கிறது. ஏனெனில், இரண்டுபட்டமனத்தை அவள் ஒருக்காலும் பொறுக்கமாட்டாள். வேஷம், நடிப்பு, செருக்கு பாசாங்கு இவற்றின் குட்டை அவள் இரக்கமின்றி, விநோதமாக வெளிபேற்றிவிடுவாள்.

—பகவான் அரவிந்தர்.



Registered at the G. P. O. as a News Paper.

# "ஆத்மஜோதி"க்கு அன்பர்களின் தொண்டு.

இன்றைக்கு ஆத்மஜோதியின் அங்கத்தவர்கள் 2000 பேர்கள் வரை இருக்கிறார்கள். வாசகர்கள் தொகை 10000-த்திற்கு அதிகமாகக் கூறலாம். ஒவ்வொரு அங்கத்தவர்களும் ஒவ்வொரு வாசகர்களும் தத்தமக்கு இயன்ற அளவில் ஜோதிக்கு தொண்டு புரிந்தால் அடுத்த ஆண்டில் ஜோதி ஆத்மீக உலகில் இன்னும் கூடுதலான சேவையைச் செய்யக்கூடும். நாம் என்ன தொண்டு செய்வது என வாசகர்கள் கேட்கலாம். ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய தொண்டு நிறைய இருக்கிறது, அவை பின்வருமாறு.

1 மாதந்தோறும் வெளியாகும் ஆத்ம ஜோதியை கிரமமாகவும் கருத்தாகவும் வாசித்தல்

2 வாசித்த நல்ல கருத்துக்களை மற்றையவர்களுக்கும் ஓய்வுநேரங்களில் எடுத்துச் சொல்லுதல்

3 வாசித்தவற்றைச் சாதனையில் கொண்டுவர முயலுதல்.

4 தங்களுக்கிசைந்தோரைத் தங்களைப்போலும் சாதகர்களாக்க முயலுதல்

5 ஒவ்வொரு அங்கத்தவரும் குறைந்தது ஒவ்வொரு அங்கத்தவரையாவது சோதியின் புதிய அங்கத்தவராகச் சேர்க்கமுயலுதல்.

---


# குங்குமம்.

பெண்களின் இனிய செந்தமிழ் மாதப்பத்திரிகை
தாய்மாரின் வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டி.
ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம்
இருக்கவேண்டியதோர் சஞ்சிகை.

ஆசிரியை. எஸ். விசாலாக்ஷி

முரளி, பச்சையப்பன் ஹாஸ்ரல் ரேட், சென்னை 10.



கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர் நா முத்தையா 'ஆத்மஜோதி' நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]

நாவலப்பிட்டி சரவண பிறஸில் பதிப்பித்தது 15-10-49 2000 பிரதிகள்